1981 பிப்ரவரி 9]

## வசிஷ்டா நதியின் குறுக்கே அணை

*வினா எண். 253— திரு, சி. பழனிமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வசிஷ்டா நதியின் குறுக்கே கல்பகனூருக்கு அருகில் 'ரெட்டி அணை' கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

(இ) இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) (ஆம்.)

(ஆ) முதலில் இத் திட்டத்தை ரூ. 3.63 லட்சத்தில் நிறைவேற்ற, சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், தற்போது இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 11.00 லட்சமாக உயருமென்றும், ஆகவே இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கும்படி தலைமைப் பொறியாளர் (பாசனம்) கேட்டு உள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் அளித்த பின் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பழனிமுத்து : கடந்த நிதி ஆண்டிலேயே இதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இப்போது பதினோரு லட்ச ரூபாய்க்கு புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலாவது எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற அந்த அணையின் நீளம் 100 மீட்டர். 3050 மீட்டர் நீளமுள்ள நீர் வழங்கும் கால்வாய் வெட்ட வேண்டுமென்று டிசைன் மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குரிய மதிப்பீடு அதன் காரணமாக உயர்ந்திருக்கிறது. அரசு விரைவாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு எவ்வளவு விரைவாக செயலாற்ற முடியுமோ அந்த அளவுக்கு ஒப்புதல் அளிக்கும்.